[2017 ஜூலை 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

173—

நியாய விலைக் கடை

***3660—திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாபுரம் தொகுதி, திசையன்விளை பேரூராட்சி, 18—வது வார்டு பகுதியிலுள்ள நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திசையன்விளை—2, நியாய விலைக் கடையில் மொத்தம் 1232 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் 18—வது வார்டு பகுதியிலுள்ள 450 குடும்ப அட்டைகளும் அடங்கும். திசையன்விளை—2, தாய் கடைக்கும் பகுதி நேரக் கடை அமைக்கக்கோரும் வார்டு—18 பகுதிக்கும் இடையே அரை கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ளது. எனவே, தற்போதுள்ள நடைமுறை விதிகளின்படி திசையன்விளை பேரூராட்சியின் 18—வது வார்டில் புதிதாக நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் உயிருக்கெல்லாம் சோறிடல் வேண்டும் என்றான் பாரதி. 'பறக்க வேண்டும் எங்கும் ஒரே சின்னக் கொடி, அது பஞ்சம்*

இல்லை என்னும் அன்னக்கொடி' என்று பாடினார் புரட்சித் தலைவர். அந்தவகையிலே, ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் 20 கிலோ அரிசி அதுவும் விலையில்லாமல் தருகின்ற நம்முடைய அருளரசியின் அரசாட்சி நடந்துகொண்டிருக்கின்றது. இந்த வேளையிலே எனது சட்டமன்றத் தொகுதி திசையன்விளை 18–வது வார்டில் இருக்கின்ற நியாய விலைக் கடையில் கிட்டத்தட்ட 1,500 குடும்ப அட்டைகள் இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால், 2,000 குடும்ப அட்டைகள் இருக்கும் என்று நான் கருதுகிறேன். மாதம் முழுவதும், இரவெல்லாம் காத்துக் கிடந்து வரிசையில் நின்று பொருட்களை வாங்குகின்ற நிலைமை இருக்கின்றது. பணியாளர்கூட ஒருவர்தான் உள்ளார். அவரும் ஒரு மாற்றுத் திறனாளியாக இருப்பதால் அவரால் முழுவீச்சில் பணி செய்யமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, இது ஏழைகளின் அரசு, எங்களுடைய குரல், ஏழைகளின் குரல் அம்பலம் ஏறாது என்பதை மாற்றியமைக்கின்ற அரசு. எனவே, இந்த அரசு எனது கோரிக்கைக்குச் செவிசாய்த்து உடனடியாகப் பிரித்துத் தந்தால் அந்தப் பகுதி மக்கள் பெருமகிழ்ச்சி அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை இந்த அரசு உடனடியாகச் செய்து தருமா? ஏனென்றால் இது எளியவர்களின் அரசு, கேட்கின்றவற்றை எல்லாம் கொடுக்கின்ற அரசு என்பதனால், இதனைச் சீர்தூக்கி செய்து தருமா என்ற கேள்வியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமைக்குரிய இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அங்கே 2,000 குடும்ப அட்டைகள் இருந்தாலும் இருக்கும் என்ற கருத்தைச் சொன்னார்கள். அங்குள்ள பட்டியலில் இருப்பது 1,232 குடும்ப அட்டைகள்தான். இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஏழையெளியவர்களின் குரலை ஒலிக்கின்ற அரசு, ஏழைகளுக்காக செயல்படுகின்ற அரசு, ஏழைகளுக்காக திட்டங்களைத் தீட்டுகின்ற அரசு என்பதை இங்கே எடுத்துரைத்தார்கள். அதிலே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குக்கூட இரண்டாவது கருத்து, மாற்றுக் கருத்து

இருக்க முடியாது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏழைகளின் அரசுதான் என்பதை நிரூபிக்கின்ற வகையில் பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில்தான் கடந்த 6 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தமிழகத்தில் 2,119 புதிய நியாய விலை அங்காடிகளைத் திறந்து சாதனைப் படைத்துள்ளது.

முற்பகல் 10—20

திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 23 முழு நேர அங்காடிகளும், 60 பகுதி நேர அங்காடிகளும் என 83 அங்காடிகள் புதியதாகத் திறக்கப்பட்டுள்ளன. இதில், இராதாபுரம் தொகுதியில் மட்டும், ஏழையெளிய, பாமர மக்களுடைய நலனைக் கருதி, 5 பகுதி நேரக் கடைகளும் 1 முழு நேரக் கடையும் என மொத்தம் 6 அங்காடிகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகிற அந்த பகுதி நேர அங்காடி, தாய்க் கடையிலிருந்து ½ கிலோ மீட்டர் தூரத்தில்தான் உள்ளது. அது அந்த விதியை பூர்த்தி செய்யவில்லை என்று சொன்னாலும், மற்ற விதிகளைப் பூர்த்தி செய்கிறது. பிரித்ததற்குப் பின்னால், தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. பிரிக்கப்படுகிற, புதிதாகக் கேட்கிற அந்த அங்காடியில், 250—க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் இருக்கின்றன. இந்த விதிகள் எல்லாம் பூர்த்தியாவதால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை நிறைவேற்றித் தரும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்களித்த வாக்காளர்களுக்குக் கன்னம் வைத்துவிடுகிறவர்களுக்கு மத்தியிலே, அன்னம் வைக்கிற அரசு என்பதை உறுதிப்படுத்தும் வகையிலே, ஓர் அறிவிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். எனது தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் அமைச்சர்

அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உடனடியாக அதைச் செய்து தர வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். மேலும், அங்கு ஒரு கூடுதல் பணியாளரை நியமிக்க வேண்டியது அவசர அவசியம் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குத் தங்கள் வாயிலாகக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்க் கடைகளில் இருக்கும் ஊழியர்கள்தான் பகுதி நேர அங்காடிகள் திறக்கப்பட்டால் அந்தக் கடைக்கும், வாரத்தில் ஒரு நாள் செல்லக்கூடிய அவசியம் ஏற்பட்டுவிடும். இப்பொழுது சொல்லப்படுகிற அதே ஊழியர்தான் அந்தப் பகுதி நேரக் கடையிலும் பணியாற்றுவார். மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த கால ஆட்சியில் இத்துறை மறுமலர்ச்சியைக் கண்டுள்ளது. இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களிலெல்லாம், ஓர் அங்காடியில் சராசரியாக 900 குடும்ப அட்டைகள்வரை இணைக்கப்பட்டிருக்கின்றன. 900 குடும்ப அட்டைகள் வரை ஓர் அங்காடியில் மற்ற மாநிலங்களிலெல்லாம் இணைக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையில், தமிழகத்திலே சராசரியாக ஓர் அங்காடிக்கு 585 குடும்ப அட்டைகள் மட்டும்தான் இணைக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு வரலாற்று சாதனை. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகளெல்லாம் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.*

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் ஒன்றுமில்லை, யாரும் உங்களையெல்லாம் சொல்லவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, உங்களைச் சொல்லவில்லை, உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, திரு.*

செங்குட்டுவன், இதெல்லாம் சரியில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, யாரையும் அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. தேவையில்லாமல், கேள்வி நேரத்தில் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, கேள்வி நேரத்தில் தேவையில்லாமல் இப்படியெல்லாம் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, முறையில்லை, உட்காருங்கள் நீங்கள். அவர் யாரையும் சொல்லவில்லை. உங்களைச் சொல்லியிருந்தால் நான் அனுமதிப்பேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திகேயன் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஏ.எல். எஸ். லெட்சுமணன் அவர்கள். (குறுக்கீடு) இருங்கள் அடுத்து அழைக்கிறேன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருநெல்வேலி மாநகராட்சி, 54–வது வார்டு பகுதியில் பழைய ரேஷன் கடையை இடித்துவிட்டு மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் புதிய ரேஷன் கடை கட்டப்பட்டு, 3 மாதங்கள் ஆகியும் இன்னும் திறக்கப்படவில்லை. அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தபொழுது, Super Market மூலமாக நடைபெறும் இந்தக் கடைக்கு வாடகை பாக்கி உள்ள காரணத்தினால், இன்னும் முடிவு பெறாமல் இருக்கிறது என்று கூறுகிறார்கள். அந்தக் கடையை விரைவில் திறந்து, அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் வகையில் அரசு அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் கூறிய திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிற புதிய கடை என்ன பிரச்சினையால் திறக்கப்படாமல் இருக்கிறது என்பது தெரியவில்லை. உடனடியாக ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திகேயன் அவர்கள்.

2017 ஜூலை 11]

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் தொகுதி, சங்கராபுரம் வட்டத்தில் அமைந்துள்ள எல்.என். பட்டி ஊராட்சியில் 1,320 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் 460 குடும்ப அட்டைதாரர்கள் எல்.என். பட்டி* hamlet village *ஆன புளியங்குட்டை மற்றும் கொடியனூர் பகுதிகளில் வசிக்கின்றார்கள். இவர்கள் 2 கிலோ மீட்டர் தூரம் சென்றால்தான் நியாய விலைக் கடையை அடைய முடியும். ஆகவே, கொடியனூர் பகுதியில், பகுதி நேர நியாய விலைக் கடைத் திறக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள் தன்னுடைய எல்.என். பட்டியில் உள்ள பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இரண்டு கிலோ மீட்டர் தூரம் இருப்பதாகச் சொன்னார். 1½ கிலோ மீட்டர் தூரம் இருந்தாலே கடையைப் பிரித்துக் கொடுக்கலாம். ஆனால், அவர் சொல்கின்ற குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றன. அதனை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி தொகுதியில், தூத்துக்குடி மாநகராட்சி, 51–வது வார்டுக்குட்பட்ட வீரநாயக்கன்தட்டு கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரும் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். அனைவரும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள். மெயின் சாலையிலிருந்து, 2 கிலோ மீட்டர் உட்புறத்தில் அந்தக் கிராமம் அமைந்துள்ளது. மேற்படி பகுதி மக்கள் 6 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள முத்தையாபுரம் பகுதிக்குச் சென்று ரேஷன் பொருட்களை வாங்கி வருகின்றனர். அந்தப் பகுதியில் மொத்தம் 130 குடும்ப*

அட்டைகள் மட்டுமே உள்ளதால் பிரித்து, பகுதி நேரக் கடையை அமைக்க முடியாது என்று அதிகாரிகள் பதில் சொல்கின்றார்கள். ஆனால், 6 கிலோ மீட்டர் தூரம் என்பதை நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு, மிகவும் ஏழையெளிய, ஆதி திராவிட மக்களின் நலனுக்காக, அந்தப் பகுதியில் கடையைப் பிரித்து அமைத்தோ அல்லது நகரும் நியாய விலைக் கடையின்மூலம் பொருட்களை விநியோகம் செய்யவோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் செயல்படுகின்ற 34,841 நியாய விலைக் கடைகளையும் அரசே ஏற்று நடத்துகின்றது. தமிழகத்தில் மட்டும்தான் அரசாங்கமே நியாய விலைக் கடைகளை ஏற்று நடத்துகிறது. மற்ற மாநிலங்களில் எல்லாம் தனியார்கள் நடத்தி வருகின்றார்கள். அரசாங்கமே நியாய விலைக் கடைகளை ஏற்று நடத்துவதினால், அதில் உள்ள செலவினம் மற்றும் நடைமுறைச் சிக்கல்கள் அதிகமாக இருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 6 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும் என்று சொன்னார்கள். அவர் குறிப்பிடுகின்ற இடத்தில் 130 குடும்ப அட்டைகள்தான் இருப்பதாகச் சொன்னார்கள். 130 குடும்ப அட்டைகள் உள்ள இடத்தில், ஒரு பணியாளரை நியமிப்பதில் சிரமம் இருக்கும். எனவே, அதற்குப் பக்கத்தில் உள்ள, அதாவது 3 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு கடையிருந்தால், அந்தக் கடையோடு, இந்த 130 குடும்ப அட்டைகளையும் இணைத்து விடலாம். அப்படி இல்லையென்று சொன்னால், நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாகப் பொருட்கள் வழங்கப்படுமா என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.